அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 386

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
10, டிசம்பர் 1987.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரச கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும்.

30 செப்டம்பர் 1987 தொடக்கம் 15 நவம்பர் 1987 வரையிலுள்ள காலப்பகுதியில் திருகோணமலை மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பணியாற்றியவர்களும் இம்மாவட்டங்களில் ஏற்பட்ட கலவரங்களினால் சொத்துக்களுக்கு நிகழ்ந்த சேதத்தினாலும்/அல்லது அசையும் உடைமைகளை இழந்ததாலும் தவித்திருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் சம்பள முற்பணம் வழங்குதல்.

22 நவம்பர் 1985 ஆம் திகதிய 313ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டிருந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க 30 செப்டம்பர் 1987 தொடக்கம் 15 நவம்பர் 1987 வரையுள்ள காலப்பகுதியில் (இரு தினங்களும் உட்பட) திருகோணமலை மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பணியாற்றியவர்களும், இம்மாவட்டங்களில் நிகழ்ந்த கலவரங்களினால் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்தினாலும்/அல்லது அசையும் உடைமைகளை இழந்ததாலும் தவித்திருப்பவர்களுமான அரசாங்க உத்தியோகத்தருக்கு அல்லது அரச கூட்டுத்தாபன ஊழியருக்கு, கணவன், மனைவி இருவரும் அரசாங்க உத்தியோகத்தர்களாகவோ கணவன் மனைவி இருவரும் அரச கூட்டுத்தாபன ஊழியர்களாகவோ இருவரில் ஒருவர் அரசாங்க உத்தியோகத்தராகவும் மற்றையவர் அரச கூட்டுத்தாபன ஊழியராகவும் இருக்கும் பட்சத்தில் அத்தகைய கணவன் மனைவியர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே சம்பள முற்பணம் வழங்கப்படலாம்.

02. இந்த சம்பள முற்பணத்துக்கான விண்ணப்பங்கள் விதித்த படிவத்தில் தயாரிக்கப்பட்டு 26 பெப்ரவரி 1988ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரைச் சென்றடையுமாறு அனுப்பப்படுதல் வேண்டும். 19.1.1984ஆம் திகதிய 237ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை இதற்குப் பயன்படுத்த வேண்டும்.

ஒப்பம்: டி.பி.ஐ.பி.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.